# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளும்கட்சி / எதிர் கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, கோவை மேற்கு,
சிங்காநல்லூர், தொண்டாமுத்தூர்
மற்றும் பேரூர் சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 4101/ 2010 / எம்சி. 8 நாள் : 30.4.2010**

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சாதாரணக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் வருகின்ற 06.05.2010 வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத்தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/ உண்மைநகல் / உத்திரவின்படி/

30/4/10
மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற சாதாரணக் கூட்டம்
## மே 2010

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| | அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்** |
| 1 | பொறியியல் பிரிவு - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு 2010 – அவிநாசி சாலை நவஇந்தியா சந்திப்பு மற்றும் 60' அகல சின்னசாமி சாலையை இணைக்கும் விதமாக நவஇந்தியா திட்ட சாலையை அமைத்தல் மற்றும் அகலப்படுத்துதல் - மதிப்பீடு ரூ.1.75 கோடி – ஒப்பந்தப் புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 2 | பொறியியல் பிரிவு -உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு 2010 – அவிநாசி சாலையிலிருந்து திருச்சி சாலையை இணைக்கும் வகையிலான ரங்கவிலாஸ் மில் திட்டசாலையில் தார்தளம் அமைத்தல் - மதிப்பீடு ரூ.2.75 கோடி – ஒப்பந்தப் புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 3 | நகரமைப்புப் பிரிவு - பிற உள்ளாட்சி அமைப்புகளை கோவை மாநகராட்சியுடன் இணைத்தல் - மாமன்றம் முடிவு செய்தல் -தொடர்பாக |
| 4 | நகரமைப்பு பிரிவு - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு - கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட சாலைகளில் பேருந்து நிறுத்தும் இடங்களில் தனியார் பங்களிப்பு பயணிகள் நிழற்குடைகள் அமைத்து 3 ஆண்டுகளுக்கு பராமரித்தல் - மேலும் 3 ஆண்டுகளுக்கு அனுமதி புதுப்பித்தல் - திரும்ப ஒப்படைத்தல் பணிக்கு இரண்டு சிப்பங்களுக்கு விருப்ப கேட்பு அறிக்கை (EOI – Second Call) மறு அழைப்பு கோரியது - மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் தொடர்பாக. |
| 5 | நகரமைப்புப் பிரிவு -வார்டு எண் 16 – அவினாசி சாலை முதல் திருச்சி சாலை வரையிலான ரங்கவிலாஸ் மில் 40'திட்ட சாலை – பாலம் அமைத்தல்- பி.எஸ்.ஜி. நிறுவனத்திற்கு அனுமதி அளித்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 6 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 16, 10 - ரங்கவிலாஸ் மில்ஸ் திட்டசாலையில் அவினாசி பிரதான சாலை முதல் சவுரிபாளையம் சாலை வரை மழைநீர் வடிகால் கட்டுதல் பணி – மதிப்பீடு ரூ.74.50 இலட்சம் - ஒப்பந்தப்புள்ளி கோரியது – மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக. |
| 7 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் -ராமநாதபுரம் நஞ்சுண்டாபுரம் சாலை – பாதாள சாக்கடை குழாய் மாற்றியமைத்தல் பணி - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 8 | மேற்கு மண்டலம் - பன்னீர் செல்வம் பூ மார்க்கெட் மேடைக்கடைகள் மற்றும் டி.பி. ரோடு வணிக வளாக கடைகள் - ஏலவைப்புத்தொகை பறிமுதல் செய்து மறுபொது ஏலம் நடத்துதல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 9 | நகரமைப்புப் பிரிவு - கிழக்கு மண்டலம்- வார்டு எண். 15- பீளமேடு மெயின்ரோடு முதல் தேர் வீதி வரை உள்ள சாலையை அகலப்படுத்துதல் -நில உரிமையாளர்களிடமிருந்து நிலம் தானமாக பெற்று சாலை அமைத்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 10 | Jnnurm - நகர்புர ஏழை மக்களுக்கான அடிப்படை வசதி திட்டம் - அண்ணா நகர் பீளமேடு குடிசைப் பகுதி - பயனாளிகளின் பட்டியல் சமர்பித்தல் - மாமன்றம் பதிவு செய்தல் - தொடர்பாக |

**இணைப்பு 2**

**நன்றியுரை**

அ) **திருக்குறள்**

**கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற**
**மிக்காருள் மிக்க கொளல்.**

**(குறள் 724)**

**விளக்கம்**

**அறிஞர்களின் அவையில் நாம் கற்றவைகளை அவர்கள் ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு எடுத்துச் சொல்லி நம்மைவிட அதிகம் கற்றவரிடமிருந்து மேலும் பலவற்றை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.**

**திருவள்ளுவர்.**

---

ஆ) **தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.**

## பொருள் எண் 1

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – பொறியியல் பிரிவு -உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு 2010 – அவிநாசி சாலை நவ இந்தியா சந்திப்பு மற்றும் 60' அகல சின்னசாமி சாலையை இணைக்கும் விதமாக நவ இந்தியா திட்ட சாலையை அமைத்தல் மற்றும் அகலப் படுத்துதல் - மதிப்பீடு ரூ.1.75 கோடி – வரப் பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

பார்வை :
1. அரசானை எண் : G.O.M.S.No:65 நாள் : 22.03.2010 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் துறை
2. மாமன்றத்தீர்மான எண் : 297 நாள் :31.03.2010
3. நகராட்சிகளின் நிர்வாக இயக்குனரக தலைமைப் பொறியாளரின் தொழில் நுட்ப அனுமதி எண்:14429/2010/D01 நாள் : 29-03-2010
4. ஒப்பந்தப்புள்ளி நாள் : 16.04.2010
5. தொழில் நுட்ப கூர்ந்தாய்வுக்குழு அறிக்கை நாள் : 23.04.2010
6. விலைப்புள்ளி உறை திறப்பு நாள் : 26.04.2010
7. ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு நாள் :26.04.2010.

*******

கோயம்புத்தூரில் நடைபெற உள்ள உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினையொட்டி புதியதாக அவிநாசி சாலை நவ இந்தியா சந்திப்பு மற்றும் 60'அகல சின்னசாமி சாலையை இணைக்கும் விதமாக நவ இந்தியா திட்ட சாலை அமைத்தல் மற்றும் அகலப்படுத்துதல் பணிக்கான மதிப்பீடு ரூ.1.75 கோடிக்கு பார்வை 1-ன்படி அரசின் நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக நகராட்சிகளின் நிர்வாக இயக்குநரக தலைமைப் பொறியாளரால் தொழில் நுட்ப அனுமதி 01-04-2010ல் வழங்கப்பட்டுள்ளது.

இப்பணிக்கு 16.04.2010 அன்று மின்னணு முறையில் (இரு உறைகள் முறையில்) ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒரே ஒப்பந்தப்புள்ளி மட்டும் பெறப்பட்டது.

1. தி/ள் எம். சரவணா கன்ஸ்ட்ரக்சன்ஸ் , கோவை

மேற்கண்ட நிறுவனம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை நகராட்சிகளின் நிர்வாக இயக்குநரக தொழில் நுட்ப கூர்ந்தாய்வுக்குழு பரிசீலனை செய்து இப்பணிக்கு குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு பெறவும், மேற்படி நிறுவனம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்றும் 23.04.2010 அன்று ஒப்புதல் வழங்கியுள்ளது. இதன் தொடர்ச்சியாக இந்நிறுவனம் அளித்துள்ள விலைப்புள்ளி உறையினை 26.04.2010 அன்று திறக்கப்பட்டது. அதன்படி தி/ள் எம். சரவணா கன்ஸ்ட்ரக்சன்ஸ் , கோவை நிறுவனத்தினர் இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு 3.11% குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ளார்.

இந்த நிறுவனம் அளித்துள்ள விலைப்புள்ளியினை 26.04.2010 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழவில் பரிசீலனை செய்யப்பட்டு தி/ள் எம்.சரவணா கன்ஸ்ட்ரக்சன்ஸ், கோவை அவர்கள் 3.11% மதிப்பீட்டிற்கு குறைவாக அளித்துள்ள விலைப்புள்ளியினை மாமன்றம் ஏற்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, மதிப்பீட்டிற்கு 3.11% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள தி/ள் எம். சரவணா கன்ஸ்ட்ரக்சன்ஸ், கோவை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கவும் அவசர அவசியம் கருதி குறுகிய கால ஒப்பந்தப்புள்ளியாக கோரப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டியும் பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் : 2988/2010/MD2

## மாநகர மன்ற தீர்மானம் எண். 27 நாள் 06.05.2010

இப்பணிக்கு மதிப்பீட்டிற்கு 3.11% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள தி/வா. எம். சரவணா கன்ஸ்ட்ரக்சன்ஸ், கோவை அவர்களின் ஒப்பந்தப் புள்ளியை ஏற்கவும் 15 நாட்களுக்குப் பதிலாக குறைந்த கால அவகாசத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதிற்கு பின்னேற்பு வழங்கியும் தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 2

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – பொறியியல் பிரிவு -உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு 2010 – அவிநாசி சாலையிலிருந்து திருச்சி சாலையை இணைக்கும் வகையிலான ரங்கவிலாஸ் மில் திட்டசாலையில் தார்தளம் அமைத்தல் - மதிப்பீடு ரூ.2.75 கோடி – வரப் பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை எண் :G.O.M.S.No:65 நாள் : 22.03.2010 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் துறை
2. மாமன்றத்தீர்மான எண் : 297 நாள் :31.03.2010
3. நகராட்சிகளின் நிர்வாக இயக்குநரக தலைமைப் பொறியாளரின் தொழில் நுட்ப அனுமதி எண்:14430/2010/D01 நாள்: 29.03.2010
4. ஒப்பந்தப்புள்ளி நாள் : 20.04.2010
5. தொழில் நுட்ப கூர்ந்தாய்வுக்குழு அறிக்கை நாள் : 23.04.2010
6. விலைப்புள்ளி உறை திறப்பு நாள் : 26.04.2010
7. ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு நாள் :26.04.2010.

*******

கோயம்புத்தூரில் நடைபெற உள்ள உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினையொட்டி அவிநாசி சாலையிலிருந்து திருச்சி சாலையை இணைக்கும் வகையிலான ரங்கவிலாஸ் மில் திட்டசாலையில் தார்தளம் அமைத்தல் பணிக்கான மதிப்பீடு ரூ.2.75 கோடிக்கு பார்வை 1ன் படி அரசின் நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக நகராட்சிகளின் நிர்வாக இயக்குநரக தலைமைப் பொறியாளரால் தொழில் நுட்ப அனுமதி 29-03-2010ல் வழங்கப்பட்டுள்ளது.

இப்பணிக்கு 20.04.2010அன்று மின்னணு முறையில் (இரு உறைகள் முறையில்) ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. தி/ள், கௌபாத் அசோசியேட்ஸ், சென்னை
2. திரு.ஏ. அம்மாசையப்பன், கோவை

மேற்கண்ட ஒப்பந்ததாரர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை நகராட்சிகளின் நிர்வாக இயக்குனரக தொழில் நுட்ப கூர்ந்தாய்வுக்குழு பரிசீலனை செய்து இப்பணிக்கு குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு பெறவும், ஒப்பந்ததாரர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றும் 23.04.2010 அன்று ஒப்புதல் வழங்கியுள்ளது. இதன் தொடர்ச்சியாக இந்நிறுவனங்கள் அளித்துள்ள விலைப்புள்ளி உறையினை 26.04.2010 அன்று திறக்கப்பட்டது.

1. தி/ள், கௌபாத் அசோசியேட்ஸ், சென்னை அவர்கள் மதிப்பீட்டிற்கு 10.70% அதிகமாக விலைப்புள்ளி கொடுத்துள்ளார்கள்.

திரு.ஏ. அம்மாசையப்பன், கோவை அவர்கள் மதிப்பீட்டிற்கு 0.27% குறைவாக விலைப்புள்ளி கொடுத்துள்ளார்.

மேற்கண்ட இரு ஒப்பந்ததாரர்கள் அளித்துள்ள விலைப்புள்ளியினை 26.04.2010 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழுவில் பரிசீலனை செய்யப்பட்டு திரு.ஏ.அம்மாசையப்பன், கோவை அவர்கள் 0.27% மதிப்பீட்டிற்கு குறைவாக அளித்துள்ள விலைப்புள்ளியினை மாமன்றம் ஏற்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே மதிப்பீட்டிற்கு 0.27% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.ஏ.அம்மாசையப்பன், கோவை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கவும் அவசர அவசியம் கருதி குறுகிய கால ஒப்பந்தப்புள்ளியாக கோரப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டியும் பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் : 2987/2010/MD2

## மாநகர மன்ற தீர்மானம் எண். 28 நாள் 06.05.2010

இப்பணிக்கு மதிப்பீட்டிற்கு 0.27% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. ஏ. அம்மாசையப்பன், கோவை அவர்களின் ஒப்பந்தப் புள்ளியை ஏற்கவும் 10 நாட்களுக்குப் பதிலாக குறைந்த கால அவகாசத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதிற்கு பின்னேற்பு வழங்கியும் தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 3

பொருள் : உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட சாலைகளில் பேருந்து நிறுத்தும் இடங்களில் தனியார் பங்களிப்புடன் பயணிகள் நிழற்குடைகள் அமைத்து 3 ஆண்டுகளுக்கு பராமரித்தல் - மேலும் 3 ஆண்டுகளுக்கு அனுமதி புதுப்பித்தல் - திரும்ப ஒப்படைத்தல் பணிக்கு இரண்டு சிப்பங்களுக்கு விருப்ப கேட்பு அறிக்கை (EOI – Second Call) மறு அழைப்பு கோரியது மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் தொடர்பாக.

பார்வை : மாமன்ற தீர்மான எண். 94, நாள். 30.09.2009

---------------

பார்வையில் கண்டுள்ள மாமன்ற தீர்மானத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட சாலைகளில் பயணிகள் நிழற்குடைகள் அமைக்க விருப்ப கேட்பு அறிக்கை (EOI) கோர அனுமதி வழங்கியதன் பேரில், தனியார் பங்களிப்புடன் பழைய பயணிகள் நிழற்குடைகளை அகற்றிவிட்டு புதியதாக நவீன பயணிகள் நிழற்குடைகள் அமைத்தல் மற்றும் பராமரித்தல் பணிக்கு 16.04.2010 ல் விருப்ப கேட்பு அறிக்கை கோரப்பட்ட ஐந்து சிப்பங்களில், சிப்பம் எண். II மற்றும் V- க்கு தி/வா. ஸ்ரீ லட்சுமி நரசிம்மர் அட்வர்டைசர்ஸ் (பி) லிட், கோயம்புத்தூர் நிறுவனமும் சிப்பம் எண். III-க்கு தி/வா. வான்டேஜ் அட்வர்டைசிங் (பி) லிட், சென்னை நிறுவனமும் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள இரண்டு சிப்பங்களில், சிப்பம் எண். I மற்றும் IV- க்கு மீண்டும் விருப்ப கேட்பு அறிக்கை மறு அழைப்பு கோரியதில் கீழ்க்கண்டவாறு விருப்ப கேட்பு அறிக்கை பெறப்பட்டது.

| சிப்பம் எண் | தி/வா. சசி அட்வர்டைசிங் (பி) லிட், கோயம்புத்தூர் |
|---|---|
| I (மேற்கு மண்டலம்) | ரூ. 7,65,000/- |
| IV (கிழக்கு மண்டலம்) | - |

விருப்ப கேட்பு அறிக்கை மறு அழைப்பில் சிப்பம் - I –க்கு மட்டும் உயர்ந்தபட்ச தொகையாக ரூ. 7,65,000/- கொடுத்துள்ள தி/வா. சசி அட்வர்டைசிங் (பி) லிட், கோயம்புத்தூர் நிறுவனத்தாருக்கும் ஆண்டு குத்தகை அடிப்படையில் தமிழ்நாடு அரசு விளம்பர பலகைகள் உரிமம் சட்டம் மற்றும் விதிகள் 2003-ல் குறிப்பிட்டுள்ளவாறு 3 ஆண்டுகளுக்கு பேருந்து நிறுத்த பயணிகள் நிழற்குடை அமைத்து பராமரிப்பு செய்யவும், மூன்று ஆண்டு முடிவிற்கு பின் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு கால நீட்டிப்பு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 5541/2009/எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண். 29 நாள் 06.05.2010**

1. பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு முதலில் மூன்று ஆண்டுகளுக்கு அனுமதிக்கவும், மேலும் மூன்று ஆண்டுகளுக்கு மாமன்ற ஒப்புதலுடன் கால நீட்டிப்பு செய்யப்படும் என்ற உத்திரவாதத்தின் பேரில் தி/வா. சசி அட்வர்டைசிங் (பி) லிட், கோயம்புத்தூர் நிறுவனத்தாருக்கு சிப்பம் I பணியினை ஒப்படை செய்ய அனுமதிக்க தீர்மானிக்கப்பட்டது.

2. நீட்டிப்பு காலம் முடிவுற்ற பிறகு மறு ஒப்பந்தப் புள்ளி கோர தீர்மானிக்கப்பட்டது.

3. மூன்று ஆண்டுகளுக்கு மட்டும் அனுமதிக்கவேண்டும் என தெரிவித்து 42-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு பி. நாச்சிமுத்து அவர்கள் ஆட்சேபனை தெரிவித்தார். ஆட்சேபனை பதிவு செய்யப்பட்டது.

---

## பொருள் எண் 4

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 16, அவினாசி சாலை முதல், திருச்சி சாலை வரையான 'ரங்க விலாஸ் மில்ஸ்- 40 அடி அகல திட்ட சாலைக்கான நிலங்கள் தனியாரிடமிருந்து நிலம் ஆர்ஜிதம் செய்து அமைக்கப்பட உள்ளது. பி.எஸ்.ஜி. நிறுவனத்தினர் இத்திட்ட சாலைக்கான நிலத்தினை தானமாக வழங்க ஒப்புதல் அளித்துள்ளனர். மேலும், இந்த திட்ட சாலையின் கிழபுற பகுதியிலிருந்து தங்களது மருத்துவமனை வளாகத்திற்கு செல்வதற்கு தங்களது சொந்த செலவில் தூண்கள் இல்லாத பாலத்தினை பள்ளத்தின் குறுக்காக அமைத்துக் கொள்ள அனுமதி வேண்டியுள்ளனர்.

மேற்படி பாலம் அமைக்கப்படுவது அதிகப்படியான பொதுமக்களுக்கு பயன்படக்கூடும் என்பதால் பின் வரும் நிபந்தனைகளுடன் பாலம் கட்டுவதற்கு அனுமதி வழங்கலாம்.

<u>நிபந்தனைகள்</u> :-

1) பாலம் கட்டுவதற்கு கோவை மாவட்ட வருவாய்த் துறையினரிடமிருந்து ஆட்சேபனை இன்மை சான்று பெறப்பட வேண்டும்.
2) பாலம் கட்டுவதற்கான வரைபடம் மற்றும் அளவீடுகள் (IRC standard) மாநகராட்சி அங்கீகாரம் பெற்ற பிறகு செயல்படுத்த வேண்டும்.
3) வாய்க்காலின் நீரோட்டத்தை தடை செய்யாத வகையில் பாலம் கட்டப்பட வேண்டும்.
4). மண்ணின் தன்மை அரசு அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் கல்லூரி ஆய்வு கூட்டத்தில், பரிசோதித்து அதன்படி பாலம் வடிவமைக்கப்பட வேண்டும்.
5). பாலம் கட்டுமானம் பணிக்கெனத் தனியே பொறியாளர் நியமிக்கப்பட்டு பணி மேற்பார்வை செய்ய வேண்டும்.
6) பாலத்தின் இருபுறமும் குறைந்தது 50 மீ நீளத்திற்கு வாய்க்காலின் ஓரத்தில் தடுப்பு சுவர் அமைக்கப்பட வேண்டும்.
7) சிங்காநல்லூர் விரிவு அபிவிருத்தித் திட்டத்தின்படி உள்ளூர் திட்டக் குழுமத்தால் வாய்க்காலின் மேற்குபுறத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள 40' அகல திட்ட சாலை பகுதி தங்கள் வசம் உள்ளது. பிற்காலத்தில் அத்திட்ட சாலை உருவாக்க வேண்டிய நிலை ஏற்படின் அதற்கான இடத்தை, அச்சமயத்தில் ஒப்படைக்க ஒப்புதல் அளிக்க வேண்டும்.
8) பாலம் கட்டி முடித்த பிறகு, பொது மக்களின் பயன்பாட்டிற்காக மாநகராட்சி வசம் ரூ. 100-க்கான முத்திரைதாள் மூலம் தான பத்திரம் செய்து ஒப்படைக்க வேண்டும்.
9) உலகத் தமிழ் செம்மொழி மாநாடு ஜூன் திங்கள் 23 ம் தேதி முதல் நடைபெறுவதை முன்னிட்டு விரைவில் திட்ட சாலை அமைக்கப்பட உள்ளதால் சாலை அமைக்க இடையூறு ஏற்படாவண்ணம், போர்க்கால அடிப்படையில் தரமாக, தடுப்பு சுவர் மற்றும் பாலம் ஆகியவற்றை சாலையின் மட்டத்திற்கு ஏற்ப நில அளவீடு செய்து கட்டப்பட வேண்டும்.

மேற்குறித்த நிபந்தனைகளுடன் பி.எஸ்.ஜி. நிறுவனத்தினர் 'ரங்கவிலாஸ் மில்ஸ்' இணைப்பு 40' திட்ட சாலை பகுதியில் பாலம் அமைத்துக் கொள்ள அனுமதி வழங்குவது குறித்து, மாமன்ற பொருள் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண். 2754/2010/எச்.1 (கி)

<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 30 நாள் 06.05.2010</u>

நிபந்தனை 7-ல் குறிப்பிட்ட சாலைக்குரிய இடத்தை உடனடியாக மாநகராட்சிக்கு ஒப்படைக்கவேண்டும் என்ற நிபந்தனையுடன் அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்க தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 5

அரசாணை எண்.131 ஊ.வ.(ம) பஞ்சாயத்து ராஜ் துறை நாள்.16.3.2007 ன்படி நகர்ப்புற மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் நிலை உயர்த்துதல், மற்றும் தரம் தாழ்த்துதல், குறைத்தல், அவ்வமைப்புகளை பிரித்தல் மற்றும் சேர்த்தல் பற்றிய நடவடிக்கையில் கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் குறிச்சி, குனியமுத்தூர், கவுண்டம்பாளையம் ஆகிய நகராட்சிகள், இருகூர், காளப்பட்டி, சரவணம்பட்டி, துடியலூர், மதுக்கரை, வடவள்ளி, வெள்ளலூர், சின்னவேடம்பட்டி, பேரூர், வீரகேரளம், வேடப்பட்டி, ஆகிய பேரூராட்சிகள், வெள்ளக்கிணர், விளாங்குறிச்சி, வெள்ளாணைப்பட்டி, சுண்டக்காமுத்தூர், சித்திரைச்சாவடி கிழக்கு மற்றும் மேற்கு, சோமையம்பாளையம், பன்னிமடை, ஒட்டர்பாளையம், பட்டணம், மயிலம்பட்டி, நீலம்பூர், மலுமிச்சம்பட்டி, சீராப்பாளையம், பேரூர் செட்டிபாளையம் மற்றும் குருடம்பாளையம் ஆகிய கிராம பஞ்சாயத்துக்களையும் சேர்த்து 30 உள்ளாட்சி பகுதிகளை இணைப்பது குறித்து மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதில், மாமன்றம் தனது தீர்மான எண். 206, நாள். 10.12.2007-ல் பொருள் குறித்து மாமன்ற அனைத்து கட்சி தலைவர், நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் விவாதித்து முடிவு செய்து மீண்டும் மன்றத்திற்கு பொருள் வைக்க தீர்மானிக்கப்பட்டது என தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

21.4.2008 அன்று வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அனைத்து கட்சி மாமன்ற உறுப்பினர்கள் விவாத கூட்டத்தின் கூட்ட நடவடிக்கையில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் மேற்கண்ட 30 உள்ளாட்சி அமைப்புகளை மாநகராட்சியுடன் இணைக்க கருத்தாய்வு நடைபெற்றுள்ளதால் அதனுடைய வளர்ச்சித் திட்ட பணிகளை எதிர்காலத்தில் மாநகராட்சிதான் செய்ய வேண்டி உள்ளதால் எல்லோரும் தங்களது கருத்துக்களை தெளிவாக எடுத்து சொல்லுமாறு கேட்டுக் கொண்டார். எதிர்கட்சி தலைவர் குறிப்பிடுகையில் நகரின் கிழக்கு பகுதியில் உள்ள இருகூர் பேரூராட்சியும், ஒட்டர்பாளையம், பட்டணம் ஆகிய கிராம பஞ்சாயத்துகளும், தற்போது புதியதாக உருவாகும் திருப்பூர் மாவட்டத்துடன் இணைக்கப்பட உள்ளதால் கோயம்புத்தூர் மாநகராட்சி எடுப்பதற்கு வாய்ப்பில்லை எனவும், நகரின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள தொண்டாமுத்தூர் விடுபட்டுள்ளதை மாநகராட்சி உடன் சேர்க்க வேண்டுமெனவும், கோயம்புத்தூர் நகரின் கிழக்கு, வடக்கு, தெற்கு பகுதிகளில் அதிக அளவில் தொழில் நிறுவனங்கள் உள்ளதால் இப்பகுதிகளை சேர்க்கவும், நகரின் மேற்கு பகுதியில் ஆய்வு செய்து விடுபட்ட பகுதிகள் இருந்தால் அவைகளை பற்றிய விவரங்களை மாமன்றத்தில் தெரிவிப்பதாக தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட கருத்துக்கள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டதில் மாநகர மன்ற தீர்மானம் எண். 99 நாள். 28.5.2008-ல் மாமன்ற அனைத்து கட்சி தலைவர்கள் கூட்டத்தை கூட்டி நன்கு ஆய்வு செய்து மீண்டும் மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டது என தீர்மானம் நிறைவேற்றியுள்ளதின்படி 21.12.2009 ம் தேதியன்று நடைபெற்ற மாமன்ற அனைத்து கட்சி தலைவர்கள் கூட்டத்தில் இப்பொருள் குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது. மற்றும் இதுகுறித்து மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் மாமன்றம் தனது தீர்மானம் எண். 154, நாள். 29.12.2009ன் மூலம் ‘கோவை மாநகராட்சியுடன் அருகாமையில் இருக்கும் பிற உள்ளாட்சிகளை இணைத்து மாநகராட்சியை விரிவுபடுத்த கொள்கை அளவில் முடிவு செய்யப்பட்டது. மாநகரை விரிவுபடுத்த எந்தெந்த உள்ளாட்சிகளை இணைப்பது என்பது குறித்தும் எல்லையை முடிவு செய்யவும் மாமன்ற அனைத்து கட்சி தலைவர் கூட்டத்தில் மீண்டும் கலந்து ஆலோசித்து முடிவு செய்ய தீர்மானிக்கப்பட்டது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதுகுறித்து 16.2.2010ல் நடைபெற்ற அனைத்து கட்சி தலைவர்கள் கூட்டத்தில் பள்ளபாளையம் மற்றும் பட்டணம் கிராமங்களை அப்பகுதி பொதுமக்கள் சேர்க்க கோரியுள்ளதின் அடிப்படையில் எதிர்கட்சி தலைவர் அவர்களால் கடிதம் வழங்கப்பட்டுள்ளது மற்றும் மலுமிச்சம்பட்டி ஊராட்சியை கோவை மாநகராட்சியுடன் இணைக்க கோரியும் ஊராட்சி மன்ற துணை தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர் ஆகியவர்களால் கடிதமும், இதுகுறித்த மலுமிச்சம்பட்டி ஊராட்சி மன்ற தீர்மான விபரமும் இணைத்து வழங்கப்பட்டுள்ளது. மேற்காண் 30 உள்ளாட்சிகளுடன் தற்போது தீத்திபாளையம் மற்றும் கீரணத்தம் ஆகிய இரு உள்ளாட்சிகளும் இணைக்கப்பட்டுள்ளது.

அதன்படி 3 நகராட்சிகள், 11 பேரூராட்சிகள் மற்றும் 18 கிராம பஞ்சாயத்துகள் ஆக மொத்தம் 32 உள்ளாட்சிகளில் அடங்கிய குக்கிராமங்கள் மாநகராட்சியுடன் இணைக்கும்போது அதன் மொத்த மக்கள் தொகை சுமார் 20 இலட்சமாகவும் மொத்த விஸ்தீரணம் 476.54 சதுர கிலோ மீட்டர் ஆக இருக்கும்.

எனவே இவை குறித்து மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மாமன்றம் முடிவு செய்யலாம். ந.க.எண். 11533/2007/எம்.எச்.5

## மாநகர மன்ற தீர்மானம் எண். 31 நாள் 06.05.2010

பொருளில் குறிப்பிட்டவாறு நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் 18 கிராம பஞ்சாயத்துக்களை கோவை மாநகராட்சியுடன் இணைத்து, கோவையை பெரு நகரமாக மாற்றுவதற்கு அனுமதி வழங்கக் கோரும் முன்மொழிவினை அரசுக்கு பரிந்துரை செய்ய தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 6

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் கீழ்க்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழக்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு 04-05-2010 அன்று பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2985/2010/ (எம்.டி.2) எம்.டி.3 | வார்டு எண் 16,10ல் ரங்கவிலாஸ் மில்ஸ் திட்டசாலையில் அவினாசி பிரதான சாலை முதல் சவுரிபாளையம் சாலை வரை மழைநீர் வடிகால் கட்டுதல் | **74.50** | 03-05-2010 இரண்டாம் அழைப்பு | திரு.எ. அம்மாசையப்பன் | **0.05%** குறைவு |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க. எண். 2985/2010/(எம்.டி.2)எம்.டி.3

**மாநகர மன்ற தீர்மானம் எண். 32 நாள் 06.05.2010**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

## பொருள் எண் 7

**கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட கோவை நெடுஞ்சாலைத் துறை திட்டங்கள் கோட்டத்தின் கீழ் ராமநாதபுரம் போத்தனூர் சாலை கிலோ மீட்டர் 3/10 நஞ்சுண்டா புரத்தில் உள்ள ரயில்வே கடவு எண் 21 ல் சாலை மேம்பாலம் கட்டும் பணி இடத்தை மாநகராட்சி பொறியாளர் அவர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் பாதாள சாக்கடைக் குழாய் இணைப்புகள் சுமார் 629 மீட்டர் (ரயில்வே உள்பட) நீளத்திற்கு மாற்றி அமைக்கப்பட வேண்டியுள்ளது. இக்குழாய் இணைப்புகளின் தற்போதைய மற்றும் மாறுதல் செய்ய வேண்டிய பகுதிகளை வரைபடத்தில் குறித்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி குழாய் இணைப்புகளை மாற்றியமைக்கும் பணிக்காக மதிப்பீடு ரூபாய் 65,00,000/- க்கு தயாரிக்கப்பட்டு கோட்டப் பொறியாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது.**

**மேற்படி பணிக்காக கோட்டப் பொறியாளர் அவர்களிடமிருந்து காசோலை எண்: 0118868 நாள் 29.03.2010 ரூபாய் 65,00,000/- க்கு இவ்வலுவலகத்திற்கு மேற்படி பணிக்காக வரப்பெற்றது.**

**மேற்படி பணி கோவை மாநகராட்சி மூலம் மேற்கொள்ளப்படுவதாலும், மேற்படி தொகை வைப்புத் தொகையாக வைத்து இப்பணியை மேற்கொள்ளப்படுவதற்கும் மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்பிக்கப்படுகிறது.**

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்: 2754/10/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண். 33 நாள் 06.05.2010**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

## பொருள் எண் 8

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வணிக மைய கடைகளை ஒப்படைக்கும் நாள்முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு மாத வாடகை அடிப்படையில் நடத்திக்கொள்ள உரிமையாணை வழங்க மன்ற அனுமதி பெற்று அறிவிப்பு அனுப்பப்பட்டு தொகை செலுத்தாத கடைகளின் ஏல வைப்புத் தொகைகளை பறிமுதல் செய்யவும், அக்கடைகளை பொது மறு ஏலத்திற்கு கொண்டுவர அனுமதி கோருவது குறித்து.

-----

அ) பன்னீர்செல்வம் பூ மார்க்கெட் மேடைக் கடைகள் - தினசரி வாடகை அடிப்படை

| வ. எண். | கடை எண். | பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட தினசரி வாடகை மதிப்பு | உயர்ந்த பட்ச ஏலம் / ஒப்பந்தப் புள்ளி தொகை | ஏலம் நடைபெற்ற நாள் | மாநகர மன்ற தீர்மான எண் மற்றும் நாள். | அறிவிப்பு வழங்கிய நாள். |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | A7 | திரு.எம்.சேட் | 125 | 500 | 05.11.2009 | 165/ 29.12.2009 | 05.01.2010 06.02.2010 |
| 2. | A8 | திரு. எம்.ஹாஜகான் | 125 | 475 | 05.11.2009 | 165/ 29.12.2009 | 05.01.2010 06.02.2010 |
| 3. | E56 | திரு.டி.சேகர் | 250 | 720 | 15.02.2010 | 291/ 31.03.2010 | 31.03.2010 09.04.2010 |

மேற்படி மூன்று நபர்களுக்கும் அவரவர் பெயர்களுக்கு நேரே குறிப்பிட்டுள்ள தேதிகளில் அனுப்பப்பட்டுள்ள அறிவிப்புகளில் ஒருவருட வாடகை முன்பணம் செலுத்தி ஒப்பந்த பத்திரம் பூர்த்தி செய்து வழங்க தெரிவிக்கப்பட்டது. இதுநாள்வரை தொகை எதுவும் செலுத்தப்படவில்லை. எனவே பொது ஏல நிபந்தனைகளின்படி அவர்கள் செலுத்தியுள்ள வைப்புத் தொகைகளை பறிமுதல் செய்யவும், மேற்படி இனத்தை பொது மறு ஏலத்திற்கு கொண்டு வரவும் அனுமதி வேண்டப்படுகிறது.

ஆ) டி.பி.ரோடு வணிக வளாகத்தில் தரைத்தள கட்டிடம் :-

ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா ஆர்.எஸ்.புரம் கிளை முதன்மை மேலாளருக்கு டி.பி ரோடு வணிக வாளகத்தின் தரைத்தள கட்டிடம் ஏ.டி.எம். சென்டருக்கு மாத உரிமம் கட்டணம் ரூ.5053/-க்கு உரிமம் ஒதுக்கீடு வழங்க மாநகர மன்ற தீர்மான எண்.162 நாள்.29.12.2009-ல் அனுமதி வழங்கப்பட்டது. எனவே, மேற்படியாருக்கு ஒரு வருட வாடகை முன்பணம் ரூ.60,636/-ஐ செலுத்தி உரிம ஒப்பந்த பத்திரம் பூர்த்தி செய்து வழங்க தெரிவித்து அறிவிப்பு கடந்த 05.01.2010, 04.02.2010, 14.03.2010, 28.04.2010 ஆகிய தேதிகளில் அனுப்பப்பட்டும் எந்தவித பதிலும் இவ்வலுவலகத்தில் கிடைக்கப் பெறவில்லை. எனவே, மேற்படி இனத்தை பொது மறு ஏலத்திற்கு கொண்டு வர அனுமதி வேண்டப்படுகிறது.

இ) மற்றும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏலத்தில் போகாத கடைகளுக்கு மீண்டும் பொது மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| பன்னீர்செல்வம் பூ மார்க்கெட் மேடை கடை எண்கள் A-7, A-8, E 56, F 63, F 67,F 68, F 70, F 72, G 85, G 86, G 87, H 93, H 94, H 98, | கிருஷ்ணசாமி முதலியார் சாலை (வடக்கு) கடை எண்கள் 4, 6 |
| தடாகம் சாலை கடை எண்கள் 22, 23, 26 | சுப்ரி தெரு புதிய கடை எண் 4 A |

அலுவலகக் குறிப்பு - அ முதல் இ வரை அனுமதிக்கலாம் ந.க.எண்.5024/ 2006/ அ1/ (மே)

### மாநகர மன்ற தீர்மானம் எண். 34 நாள் 06.05.2010

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 9

கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம், வார்டு எண். 15 க்குட்பட்ட பீளமேடு மெயின்ரோடு முதல் தேர் வீதி வரை உள்ள சாலையை அகலப்படுத்தி போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும், உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு நடைபெறுவதையொட்டி, பாதுகாப்பான போக்குவரத்தை ஏற்படுத்தித் தருமாறு 15வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.இ. ராமமூர்த்தி அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

கோயம்புத்தூர் விரிவு அபிவிருத்தி திட்ட எண். 28, அவினாசி சாலை முதல் சௌரிபாளையம் மகாலட்சுமி கோயில் வரை 50 அடி அகல திட்டச்சாலை உள்ளது. கோயம்புத்தூர் விரிவு திட்ட எண். 30ல் மகாலட்சுமி கோவிலிருந்து தேர் வீதி சாலை வரை நத்தம் பகுதியில் அமைவதால், நத்தம் பகுதியில் திட்டச் சாலையின் விபரம் வழங்கப்படவில்லை. மாமன்ற உறுப்பினர் அவர்கள் 30'0" அடி அகலத்தில் சாலையை விரிவுபடுத்தி பாதுகாப்பான போக்குவரத்தினை ஏற்படுத்தி தருமாறு கோரியுள்ளார்.

தற்போது நிலையிலுள்ள சாலையையொட்டி அமைந்துள்ள வீட்டின் உரிமையாளர்கள் மாநகராட்சிக்கு சாலைக்கான நிலத்தை தானமாக ஒப்படைத்தால் 30' 0" அடி அகலத்தில் சாலையை அகலப்படுத்தி பாதுகாப்பான போக்குவரத்தினை ஏற்படுத்தக் கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன. எனவே மொத்தம் 26 நில உரிமையாளர்களிடமிருந்து சாலைக்கான 3902 சதுர அடி நிலத்தை தானமாக பெற்ற பின்னர் சாலை அமைக்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்: 4936/2010/எச்.1(கி)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 35 நாள் 06.05.2010</u>**

பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு 30' அகல சாலை அமைக்க தேவையான நிலத்தை நில உரிமையாளர்களிடமிருந்து நேரடி பேச்சுவார்த்தை மூலம் கையகப்படுத்தி மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்படும் இழப்பீட்டுத் தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும், சாலையினை அகலப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 10

பொருள் - கோவை மாநகராட்சி - ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டம் - நகர்புர ஏழை மக்களுக்கான அடிப்படை வசதி திட்டம் - அண்ணா நகர் பீளமேடு குடிசைப் பகுதியில் பயனாளிகளின் பட்டியல் சமர்பித்தல்-தொடர்பாக.

-------------

கோயம்புத்தூர் மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் நகர்புர ஏழை மக்களுக்கான அடிப்படை வசதி திட்டத்தின்கீழ் பகுதி I மற்றும் II ல் 80 எண்ணிக்கை கொண்ட குடிசைப் பகுதி பயனாளிகளுக்கு தார்சு வீடு கட்டுவதற்கு மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

இதில் இரண்டாம் கட்டத்தில் (Phase II) தார்சு வீடுகள் கட்டுவதற்காக அண்ணா நகர் (பீளமேடு) குடிசைப் பகுதி தேர்வு செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியில் திட்டசாலை வருவதால் அவ்விடத்தில் வசிக்கும் பயனாளிகளை உயிரிய அளவியல் (பயோ மெட்ரிக்) எடுக்கப்பட்டு பயனாளிகள் பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

அண்ணா நகர் பீளமேடு குடிசைப் பகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளின் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். ந.க.எண். 13089/06/JN3)J

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண். 36 நாள் 06.05.2010</u>**

பீளமேடு அண்ணா நகர் குடிசைப் பகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளின் பட்டியல் பதிவு செய்யப்பட்டது. மேலும் அடையாள அட்டை/குடும்ப அட்டை இல்லாத பயனாளிகளுக்கு கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து இருப்பிட சான்று பெற்று வழங்கினால் அவர்களையும் பயனாளிகளின் பட்டியலில் சேர்த்துக் கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி